21.02.2025



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.03/2010</u>**

**<u>பி.வா.சா.2–ராமசாமி, த/பெ.போஜன்</u>**

**<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என் தகப்பனார் பெயர் போஜன் செட்டி என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு மூன்று மகன்கள் என்றால் சரிதான், கிருஷ்ணன்–1, நான்–2, வெள்ளையன்–3 ஆகியோர்கள் ஆவார்கள். எங்கள் குடும்ப சொத்துக்களை 1978ம் வருடத்தில் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். குடும்ப சொத்தின் சர்வே எண்.122/4டி – 66 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்தில் வடபுறகோடியில் 22 செண்ட் 1ம் வாதி கிருஷ்ணனுக்கும், அதன் தென்புறம் நடுபாகத்தில் எனக்கு 22 செண்டும், ஆக தென்புறம் 22 செண்ட் நிலம் வெள்ளையனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

02. வடபுறம் கோடியிலுள்ள சர்வே எண்.122/4டி ஆனது 4டி1 ஆகவும், நடுபுறம் உள்ள என்னுடைய பங்கு சர்வே எண்.122/4டி3 என்றும், ஆக தென்புறம் உள்ள

21.02.2025



வெள்ளையன் பங்கு சர்வே எண்.122/4 டி4 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட சொத்துக்களுக்கு பாசன கிணறு உள்ள இடம் சர்வே எண்.122/4 பி என்று சொன்னால் சரிதான். கிணற்றுக்கு அருகே உள்ள துளைரோடு சர்வே எண்.122/4 பி2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

03. நாங்கள் மூவரும் தென்வடலாக தான் பாசன வாய்க்கால் ஏற்படுத்தி விவசாயம் செய்து வருகிறோம். பாகம் பிரிவினை செய்வதற்கு முன்பு கிழமேல்ஏரி வாய்க்கால் வழியாக 66 செண்ட் நிலத்திற்கு சென்று வந்தீர்கள் என்றால் சரிதான். அதேபோல் நேரடியாக தான் ஏரியிலிருந்து பாசன வாய்க்கால் மூலம் 66 செண்டுக்கு தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வந்தோம்.

04. பாகம்பிரித்த பின்பு பாசனத்திற்காக நிலம் ஒதுக்கினீர்களா என்றால் ஒதுக்கினோம். பாசன வாய்க்காலுக்கு எத்தனை செண்டை ஒதுக்கினீர்கள் என்று சொன்னால் ஏற்கனவே இருந்த பாசன வாய்க்காலை மூன்றாக பிரித்து கொண்டோம். மேற்கண்ட பாகச்சொத்திற்கு மேற்கே உள்ள 33 செண்டை நானும்,

21.02.2025



என் உடன்பிறந்த சகோதரர்கள் என மூவரும் சேர்ந்து குழந்தைவேல் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினோம்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

/உண்மை நகல்/
ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.